களுக்கு ஐந்தாவது நிதிக் குழுவின்படி ஊதியம் கொடுக்கப் பட்டுவிட்டது. ஆக ஐந்தாவது ஊதியக் குழுவின்படி நஷ்டத்தில் ஓடுகின்ற பொதுத் துறை கூட பெறுகின்ற நேரத்தில் இந்த டான்சி மட்டும் பெறாமல் இருப்பதற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே டான்சி நிறுவனம் கடுமை யான நிதி நெருக்கடியில் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஏறத்தாழ 24 கோடி ரூபாய் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக் கின்ற காரணத்தினாலும் சமீபத்திலேதான் அவர்களுக்கு 2 அகவிலைப்படிகளை டான்சி நிறுவனம் நடைமுறைக்கு கொண்டு வந்திருப்பதன் காரணமாகவும் இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

சேலத்தில் மருத்துவக் கல்லூரி

* 2111 திரு. கே. ஆர். ஜி. தனபாலன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலத்தில் மருத்துவக்கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: துணைத் தலைவர் அவர்களே

ஆம்

திரு. கே. ஆர். ஜி. தனபாலன் ; துணைத் தலைவர் அவர்களே, சேலத்தில் மருத்துவக் கல்லூரி இந்த ஆண்டு அமைக் கப்படுமேயானால் அதற்கான இட ஒதுக்கீடு கையகப்படுத்தப் பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : துணைத் தலைவர் அவர்களே, சேலம் மருத்துவக் கல்லூரியை சேலத்திலே நடத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த ஆண்டு முதலாம் ஆண்டு படிப்பினை அங்கே துவங்கு வதற்காக அங்கே இருக்கின்ற கூட்டுறவு பண்டக சாலையினுடைய கட்டிடத்தை அரசு கேட்டுக்கொண்டு இருக்கிறது. அதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கட்டிடப் பணி களும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கட்டிடப் பணிகள் முழுமையாக நடைபெற்று முடிந்தவுடன் அங்கே அந்த வகுப்புகள் துவங்கப்படும். அதுவரையில் இடைக் காலமாக முதலாம் ஆண்டு வகுப்புகளை மட்டும் கூட்டுறவு

1990 ஏப்ரல் 17]

பண்டகசாலையில் அந்த இடத்தைப் பெற்று அங்கே நடத்துவதற்கு ஏற்பாடுகளை இந்த அரசு செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ஆர். ஜி. தனபாலன் : துணைத் தலைவர் அவர்களே, சேலம் மருத்துவக் கல்லூரியிலே படிக்கின்ற மாணவர்கள் தங்குவதற்கு ஹாஸ்டல் வசதிகளும் இந்த ஆண்டு சேலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : துணைத் தலைவர் அவர்களே, அதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

செங்கோட்டை அரசு மருத்துவமனை.

* 2517 திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

செங்கோட்டை அரசு மருத்துவமனையில் அடிப்படை வசதிகளைப் பெருக்கவும், படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: துணைத் தலைவர் அவர்களே, அரசின் நிதிநிலைமைகளைப் பொறுத்தும், தேவைகளைக் கருத்தில் கொண்டும் தக்க தருணத்தில் நடவடிக்கை எடுக்கும்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் ; துணைத் தலைவர் அவர்களே, செங்கோட்டை அரசு மருத்துவமனை பழைய திருவாங்கூர் மஹாராஜாவினுடைய காலத்திலே ஆரம்பிக்கப்பட்டது. இப்போது மஹாராஜாவினுடைய ஆட்சி முடிந்து நமது கலைஞரின் ஆட்சி நடந்துக் கொண்டிருக்கிறது. ஆட்சி மாறினாலும் கூட மஹாராஜாவினுடைய ஆட்சிக் காலத்தில் என்ன வசதிகள் இருந்ததோ அந்த வசதிகள்தான் இப்போதும் இருக்கிறது. கலைஞரின் ஆட்சியிலாவது அந்த அரசு மருத்துவமனையினுடைய படுக்கையினுடைய வசதிகளைக் கூட்டவும்—வையரிங் பண்ணி 50 வருஷம் ஆச்சு. அதிலே ஆப்பரேஷன் நடக்கும்போது ஃபேன் கீழே விழுந்து டாக்டர் சாகப் பார்த்தார். இது பத்திரிகையிலே வந்தது. இவற்றை கருத்தில் கொண்டு—அரசு வேகமாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.